களும், தனிப்பட்ட சங்கங்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதனால் அதை கைவிடவேண்டிய நிலை இருக்கிறது. இப்போது கோவில்களில் கட்டப்படும் கடைகளை வெளியே கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு

(அ) மணலி எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru N. Dennis will now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance.

THIRU N. DENNIS : I now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, i.e., fire at Manali Project on 20th July 1972 and the serious loss involved therein.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 20-7-1972 அன்று இரவு 11-30 மணியளவில் மணலியில் உள்ள சென்னை, எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டது. 25,000 டன் உயர்வகை மண்ணெண்ணெய் அடங்கிய 406-ஆம் எண் தொட்டியில் தீ பற்றியது.

1972 ஆகஸ்ட் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

தீ விபத்து பற்றிய தகவல் சென்னை-3 இல் உள்ள தீ விபத்து தகவல் அறையில் நள்ளிரவில் கிடைத்தது. வண்ணாரப்பேட்டை தீ அணைப்பு நிலையத்திலிருந்து 2 தீயணைப்புப் பிரிவுகள் உடனடியாகப் புறப்பட்டு, 14 கி.மீ. தொலைவைக் கடந்த தீ விபத்து நடந்த இடத்தை 21-7-72 அன்று 00.17 மணிக்கு அடைந்தன. இவற்றின் பின்னால் எஸ்பிளநேடு, ராயபுரம், வேப்பேரி, எழும்பூர், தேனாம்பேட்டை தீ அணைப்பு நிலையங்களிலிருந்து தீ அணைப்பு வண்டிகள் வந்து சேர்ந்தன. அச்சமயம் 406-ஆம் எண் எண்ணெய்த் தொட்டி கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையைச் சேர்ந்த தீ அணைப்புப் படையினர் தீயை அணைக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அண்மையில் உள்ள தொட்டிகளுக்கும் வளைவுகளுக்கும் தீ பரவாமல் தடுக்கப்பட்டு 11 மணி நேரம் கழித்து தீ முழுவதும் அணைக்கப்பட்டது. தமிழ்நாட்டு தீ அணைப்புப் படையினரின் இன்ஸ்பெக்டர், வட சென்னை தீ அணைப்புப் படையின் துணை இயக்குநர், தீ அணைப்பு கோட்ட அதிகாரி ஆகியோர் தீ விபத்து நடந்த இடத்திற்கு வந்திருந்து தீ அணைப்புப் படையினரின் பணியை மேற்பார்வையிட்டனர்.

406-ஆம் எண் தொட்டியில் உள்ள மண்ணெண்ணெய் முழுவதும் எரிந்து விட்டது. தொட்டியின் ஒரு பகுதியும் சேதமடைந்தது. உயிர்ச்சேதமோ, காயமோ எவருக்கும் ஏற்படவில்லை. ஏறத்தாழ ரூ. 16,65,500 மதிப்புள்ள சொத்து விபத்தில் சிக்கியது. ரூ. 2.7 இலட்சம் மதிப்புள்ள மண்ணெண்ணெய் விரயமாயிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. தொட்டிச் சாதனங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் ரூ. 6.5 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. தீ விபத்திற்கான காரணம் பற்றி வல்லுநர் குழு ஒன்று ஆய்வு செய்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, தீ விபத்து ஏற்படக் காரணம் என்ன ? தீ விபத்து ஏற்பட்ட உடனே தகுந்த தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாததற்கு என்ன காரணம் ? இனிமேலாவது இப்படிப்பட்ட விபத்து ஏற்பட்ட உடனே தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பதற்கான காரணங்களை ஆராய

மணலி எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவனத்தார் ஒரு குழுவை அமைத்து விசாரணை செய்து வருகிறார்கள். அதன் அறிக்கை வந்த பிறகு ஏற்ற நடவடிக்கைகளை முன் எச்சரிக்கையாக எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பள்ளி இறுதியாண்டு மாணவர்களுக்கான கல்விப் பயிற்சி முறை ரத்து செய்யப்பட்டுள்ளதால் இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள ஏமாற்றம் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the abolition of Educational Training Course for S.S.L.C., students causing disappointment to youths, particularly, girls.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1967-68-ஆம் வருடம் இரண்டாம் பிரிவு திட்டத்தை (Part II Scheme) பரிசீலனை செய்யும்பொழுது, பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை தேவைக்கு மிகுதியாக இருப்பதால், பயிற்சிப் பிரிவுகள் குறைக்கப் பட வேண்டுமென கருத்து தெரிவிக்கப்பட்டது. ஒரு பயிற்சிப் பிரிவு 40 மாணவர்களைக் கொண்டதாகும். அதன்படி புதிதாக மாணவர்களைச் சேர்க்கும் பயிற்சிப் பிரிவுகள் கீழே குறிப்பிட்ட வாறு நிர்ணயிக்கப்பட்டன :—

வருடம்.	மொத்தப் பிரிவுகள்.
1. 1967—68	252
2. 1968—69	269
3. 1969—70	227
4. 1970—71	199
5. 1971—72	160

தற்சமயம், 129 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவைகளில், 72 அரசினர் நிறுவனங்கள், 57 மானியம் பெறும் தனியார் நிறுவனங்கள் ஆகும்.

பள்ளிக் கல்வித் துறையினரால் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங் கள் மூலம், 1972-73-ம் வருடத் துவக்கத்தில் 13,000 (ஹையர் கிரேடு